457

உ

குருவே துணை

பெண்மாட்சி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 MAY 1955
MADRAS

457
2-55

ஆசிரியர்:

திருவாமாத்தூர் கௌமாராலயம்

தவத்திரு. தண்டபாணி சுவாமிகளது

வாழ்க்கைத் துணைவியார்

திருமதி. சுந்தரத்தம்மை அவர்கள்

*

வெளியிடுவோர்:

ஞ்சிப்பட்டு மணியம்

ரெட்டியார் அவர்களின்

னைவியார்

சுமி அம்மாள் அவர்கள்

1955

Q25
N55
78419

இந்நூல் கிடைக்கும் இடங்கள்:

தி. செ. முருகதாச பிள்ளை
கௌமார மடாலயம்,
திருவாமாத்தூர், விழுப்புரம் P. O.

இலக்ஷ்மி நாராயண ரெட்டியார்
நடுக்கம்பத்தம்,
ராதாபுரம் P. O.,
(வயா) விக்கிரவாண்டி

திருப்புகழமிர்தம் அச்சகம், சென்னை-2.

உ

குருவே துணை

பெண் மாட்சி

(இரண்டாம் பதிப்பு)

ஆசிரியர்:

திருவாமாத்தூர். கௌமாரமடாலயம்
மகான். வண்ணச்சரபம் திருப்புகழ்ச்சுவாமிகள்
முருகதாச சுவாமிகள் என வழங்கும்
தவத்திரு. தண்டபாணி சுவாமிகளது
வாழ்க்கைத்துணைவியராயிருந்த
திருமதி-சுந்தரத்தம்மை அவர்கள்.

OFFICE OF THE ... BOOKS
... AS

குறிப்புரை:

திருமுருக. கிருபானந்தவாரி அவர்கள்.

வெளியிடுவோர்:
கடலூருக்கடுத்த கீழ்மிஞ்சிப்பட்டு
மணியம். திரு. சுந்தர ரெட்டியார் அவர்களது
மனைவியார்
திருவாட்டி இராஜலட்சுமியம்மாள்

பதிப்புரிமை:
கௌமார சபை
திருவாமாத்தூர்

1955

விலை
0-2-0

திருப்புகழமிர்தம் அச்சகம்,
144, சாமிநாயக்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

திருமதி சுந்தரத்தம்மை அவர்கள்

உ

குருவே துணை

முன்னுரை

"பெண்மாட்சி", என்ற இந்நூல் பெண்களது உயர்வைக் கூறுவது என்ற பொருளில் அமைந்திருக்கிறது. பெண்ணினத்தை இழிவு படுத்திக் கூறும் பெரியோர் சிலரது கருத்தை விடுத்து, உயர்வின் இயல்பை இந்நூல் விளக்குகிறது. சமத்துவம், சகோதரத்துவம் என்ற பண்போடு மக்கள் வாழவேண்டும். உயர்ந்த ஞான நிலை கைவரப் பெற்ற பெரியோர் வெறுத்துக் கூறுர்.

"ஞான மெய்தினர் நாரியர் நேரினும்
மீன நோக்கியென் றேமிக வேண்டல்" உயர்ந்தநிலை.

சரம், அசரம் என்ற யாவும் இறை வடிவாகவே ணும் உண்மைத் தவமுடையோர், பெண்ணினத்தை ட்டும் வேருகவா காண்பர்?

ஒவ்வொரு சமயச் சார்பில் கடவுள் வழிபாடு செய்பவர்களும் அநுபவ முதிர்ச்சியில் அவ்வடிவாகவே காண்கிருர்கள் எப்பொருளையும்.

சிவ வழிபாடுடையோர் அட்டவித மூர்த்தமாகக் காண்பர். சக்தி வழிபாடுடையோர் சத்திவடிவாகக் காண்பர். அதுபோலவேதான் ஒவ்வொரு சமயத்தவர்களும். தூலமான உடல் வேறுபாடு கருதும் உலகியல்பினரான மக்களும் கூட, ஒரே விதமாகப் பெண்களை நினைப்பதில்லை. தாய்—தமக்கை—தங்கை—மகள்—மனைவி - இன்னும், மாமி அண்ணி போன்றவர்களை அந்தந்த நிலைக்கேற்றபடி உரிமை கொள்கின்ருர்கள். குரு மனைவியை, வணங்குகின்ருர்கள்.

"தாரத்தைத் தார மென்பேன் மற்ற மாதரைத் தாயரென்பேன்
சூரற் செகுத்தவன் ஆணைசொன்னேன்என் சுபாவத்தையே"

என்பர், வீரபாண்டியப் புலவர். அவர் வரலாறு கூற வந்த வண்ணச்சரபம் **ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகள்** புலவர் புராணம்-டீ சருக்கத்தில் இதனைச் சிறப்பித்துக் கூறு கின்றார்.

'தாரமன்றி மற்றைத் தையலாரை யெல்லாம்
ஈரமுறு தாயென்றே யென்றும்நினைப்பேன் இதுமெய்
சூரற் செகுத்தோன்ஆணை யென்னும்ஒருபாச் சொன்னன்
பாரதனிலிவ் விரதம் பலரும் கொளற்பாற் றன்றே'

அந்தவிதி அன்னவனுக்(கு) அமையத் தலையிலெழுதிக்
கந்தமலர் மேல்வாழும் கடவுள்கரங்கள் தழைக!
இந்தஉலகை வெறுத்திட்(டு) இரந்துண் டதற்பின்மடவார்
பந்தம் சிலருக்கெழுதும் பனவன்கரம் இற்(று)உகவே.

—புலவர்புராணம். வீரபாண்டியப்புலவர்சருக்கம்.

அத்தகைய மனத்திட்பம் அமையப் பெறுதநிலையில் தான் பெண்களை இகழும் தன்மை ஏற்படுகிறது. ஒரு பொருளை விரும்புவதும் வெறுப்பதும் அற்ற நிலையே ஞானம். பக்தி நெறியில் முயலும் போது மனம் உலகப் பொருளில் மயங்கும் சமயத்து அதனைத் தடைசெய்யும் நெறியே, வைராக்கியம் ஆம். அதையும் தாண்டிய மேல் நிலையே ஞானம்.

ஆண்டவனை வழிபட்டுத் திருவருள்பெற்ற மணிவாசகப் பெருமான், 'அம்மையே அப்பா' என்றழைக் கின்றார். கருணை வடிவம் அம்மை திருவுருவம் அது போலவே எல்லாப் பெண்களையும் காண்பார்க்கு, வேறு

பட்ட தீய எண்ணம் எழாது. அம் முறையில் யாரும் வாழவேண்டுமென்பதே நமது முன்னோர் கருத்து. உலகியல்பில், எந்தப் பெண்களைக் கண்டாலும் 'அம்மா!' என்றே அழைக்கின்றோம். பேசுகின்றோம். உள்ளத்திலும் ஒத்த பண்பாடு தமிழ் மக்கட்கு இன்றியமையாதது.

சௌந்தரியலகரி என்று தேவியின் உருவ அணி கூறத் தொடங்கிய சங்கரமுனிவர், சத்தியின் தொடர்பின்றிச் சிவம் தனித்து நின்று தொழில் செய்ய வல்லதன்று எனக் கூறுகின்றார்.

அந்த நூலைத் தமிழில் மொழி பெயர்த்த கவிராச பண்டிதர் ஷை நூலில்,

"சிவமெனும் பொருளும் ஆதிசத்தியொடு சேரின் எத்தொழிலும் வல்லதாம், இவள் பிரிந்திடில் இயங்குதற்கும் அரிது என்னவே மறை யிசைக்கும்'' என்று கூறியுள்ளார்.

அக் கருத்தை முதலாகக் கொண்டே இந்நூல் தொடங்குகின்றது. உருவமற்ற சிவமாக விளங்கும் பரம்பொருளுங்கூட, திருவருட்சத்தியின் துணை கொண்டே ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களை நடத்துகின்றது. அன்றியும், உருவத்துடன் விளங்கும் சிவபிரான் முதலாகவுள்ள கடவுளர்களும் சக்தியுடனே காட்சியளிக்கின்றார்கள். என்று தொடங்கி விளக்கமாகக் கூறிக்கொண்டு செல்கிறது. சரித்திர வரலாறுகளைத் துணைபற்றி யாத்துள்ளமை சிறப்பாகும். ஒரு சில வரலாறு விளங்கவில்லை. ஓரளவு ஆங்காங்கு குறிப்பு அமைத்திருப்பதால் கருத்தை

யறியத் துணையாகும். பாடல், இனிய, எளிய, கலிவெண்பா நடையினது.

இதை இயற்றிய, ஆசிரியர், வண்ணச்சரபம் அருட் பெருந் திரு. தண்டபாணி சுவாமிகளது அருள் வாழ்க்கைத் துணைவியாக அமையும் பேறு பெற்ற அம்மையார்-சுந்தரம்மையவர்கள். ஷை சுவாமிகளையே ஆசிரியராகவும், உபதேச குருவாகவும், வழிபடு கடவுளாகவும் பெற்றவர். அவரது, பாடல்களமைந்த, எட்டுப் புத்தகங்களைப் படித் துணரும் பண்பினர். இனிய ஓசையுடன் கெம்பீரமாகப் படித்து அன்பர்களுள் போற்றி மகிழ வாழ்ந்தவர்கள். தமது தளர்ந்த நிலையிலும் புலவர்கள்-அன்பர்கள் சுவாமிகள் மடாலயத்துக்கு வந்த காலத்து இனிமையுடன் உடனிருந்து அன்புகனிய உணவூட்டும் பேரன்பினர். ஷை சுவாமிகளிடம் பல நூல்களைப் பாடம் கேட்டவர். எக்காலத்தும் வரும் பேரன்பர்கள் மகிழ அன்னம் பாலித்த அம்மையார். இவர்களைக் கண்டவர் சுவாமி களைக் கண்டதுபோல் மகிழ்வர், சுவாமிகளது பாடல்களைக் காதாரக்கேட்டு அன்புறுவர். சுவாமிகளிடமே தூய கல்லாடை பெற்று அவரது தூல வாழ்க்கைக்குப் பின் அணிந்து துறவு நிலையினராக வாழ்ந்துவந்த இவர்கள் செய்த நூல் இன்னும் பல வுண்டு.

சுவாமிகளுடன் முப்பத்தாறு ஆண்டு வாழ்ந்தும், பின் முப்பத்தாறு ஆண்டுவரை நெறியில் இருந் தும் எழுபத்திரண்டாவது வயதில், விபவ ஆண்டு, கார்த்திகைத் திங்கள் கந்தசஷ்டி கலந்த உத்திராட நட்சத்திரத்தன்று திருவாமாத்தூரில் கௌமாரமடத்தின் எல்லைதாண்டா நியமத்துடனிருந்து சிவப்பேறெய்தினர்.

விபவ ஆண்டில் ஐப்பசி மாத இறுதியில் தொடங்கி, கார்த்திகை மீ 2-ந் தேதியில் கந்தசஷ்டி விழா நடந்தது. "'ஆண்டு விபவத்(து) அவிர் தேள்மதி கதிர்நாள் வேண்டுருகன் சட்டி மிளிருநாளில்'' என்பது பாடல். இவரது தலைப்புதல்வர் சந்தப்புலமை. தி. மு. செந்தினயகசுவாமிகளும், சுந்தரசுவாமிகள், கந்தசாமிசுவாமிகள், தி. செ. முருகதாச பிள்ளை, இவர்களும் பரிபூரணப் பாடல் கூறினர்.

சிரவணபுரம். கௌமார மடாலயம். அருண்மிகு. இராமானந்த சுவாமிகள், தமது குருபத்தினியான இவரை,

ஆசான் மனையை அடிதீண்டா தருச்சிக்க
வாசார் மலரால் மதித்து.

என்ற சைவசமய நெறிப்படி நேரில்வந்து சந்திக்கும் காலத்து மலரால் அருச்சித்து, கற்பூரச் சுடர்காட்டி வணங்கித் துதிப்பர். அவரது மாணவராக விளங்கிய கந்தசாமி சுவாமிகள் பாடிய பரிபூரணப் பாடல்கள் கல் மனத்தையும் கரையச் செய்யும் பான்மையதாகும். ஒரு பாடல் அடுத்துள்ளது காண்க.

"'பாட்டி! இயற்செந்தமிழின் பாட்டி! எழிற்பத்தியமு(து)
ஊட்டி அருளில் உறங்களமை விட்டருள்வாய்
தாட்டிக வண்ணச்சரபத் தாதைகழற் பூமுடிமேற்
சூட்டி மணம் கொண்டனையே! சுந்தரப்பே ரம்பிகையே!''

இதுபோற் பல பாடல்கள் பாடியுள்ளனர். நிற்க;

இத்தகைய பலசிறப்பமையும் இந்நூலாசிரியராம் அம்மையாரவர்கள், இவ்வியத்தகு நூலை ஸ்ரீ சுவாமிகள் ஆணைப்படியே இயற்றலாயினர். அக்கால் உடனிருந்த புலவர்களோடு சுவாமிகளும் சிறப்புக்கவி கூறி ஆமோதித்த பெருஞ் சிறப்பமையப் பெற்றது இந்நூலாகும்.

விழுப்புரத்திற்கு அடுத்த ராதாபுரம், நடுக்கம்பத்தம், முத்து குமரப்பரெட்டியார் பாரியாள் பிச்சாம்பிகையம்மையார் விருப்பத்திற்கும், ஸ்ரீயார் தவப்புதல்வர் இலட்சுமி நாராயணரெட்டியார் தர்மபத்தினி பிரகன்னுயகி அம்மையார் வேண்டுகோளுக்கும் இணங்கி ஸ்ரீ யார் செல்வப் புதல்வியாகவும், கீழிருஞ்சிப்பட்டு. மணியம். சுந்தரரெட்டியாரது வாழ்க்கைத் துணைவியாகவும் விளங்கும் திருமதி. இராஜலட்சுமி அம்மாளவர்கள், இந்நூலின் அருமை உணர்ந்த தந்தையார் லட்சுமி நாராயணரெட்டியார் அவர்களின் தூண்டுதலின் காரணமாகத் தம் பொருள் உதவியால் இவ்வரிய பைந்தமிழ் நூலை வெளியிடலானுர்கள். தந்தையார் போன்றே இவ்வம்மையாரும், கணவனும், புத்திரர்களும் சுவாமிகளின் அன்பின் தொடர்புடன் வாழ்பவர்கள். இனிமையான நற்குணம் படைத்த பண்புடையவர்கள்.

தவநெறி இயல்பும், தமிழ்ப் புலமையும் கொண்டு ஔவைப்பிராட்டியார் போல் வாழ்ந்த அம்மையார் பெண்ணினத்திற்கு உயர்வு கூறும் முறையில் செய்த இவ்வரிய இனிய தமிழ் நூலுக்கு ஆங்காங்கே திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களால் குறிப்புரை எழுதப் பெற்றது "பொன் மலர் நாற்றமுடைத்து" என்ற முதுமொழியை நினைவூட்டுவதாய் உள்ளது.

இத்தகைய பல்லாற்றானும் சிறப்புடைய இந்நூலைத் தம் பொருளால் அச்சிறப்பதித்து வெளியிட்டு புலவர், தவசிகள், அன்பர்கள் பெற உதவிய திருமதி. இராஜலட்சுமியம்மையார், அம்மையப்பனாக இலங்கி இன்னருள் புரியும் இறைவன் திருவருள் நிறையப் பெற்று பல நலமுடன் பல்லாண்டு வாழ வேண்டுகிறேன். நலம்.

தங்கல்:-

தண்டபாணிசுவாமி மடம்
அடிவாரம்
பழநி.
29-3-55

இங்ஙனம்,

தி.செ. முருகதாச பிள்ளை
கௌமார மடாலயம்
திருவாமாத்தூர்.
விழுப்புரம் P. O.

உ

குருவே துணை

பதிப்புப் பாயிரம்

எண்சீர்விருத்தம்.

திருமருவும் நெல்வேலிப் பதியினிடை தோன்றித்
திருமாதைப் பதியினில்வாழ் திருத்தண்ட பாணிக்
குருபரன்றன் திருமனையாம் சுந்தரப்பேரம்மை
கூறுமிந்தப் பெண்மாட்சிப் பெயர்நூலை யன்பர்
கருதியுணர்ந் திட,ராதா புரத்தினில்வே ளனர்தம்
கவின்மரபில் இலக்குமிநா ராயணநற் பெரியோன்
தருமகளாத் திகழ்ராஜ லட்சுமியாம் அம்மை
தானுவந்தச் சிட்டளித்தார் தவர்,புலவர் கொளவே.

வெண்பா

பெண்மாட்சி சுந்தரம்மை பேசியதோர்ந் தன்பரெலாம்
விண்மாட்சி கொள்ள அச்சில் மேவுவித்துக்-கண்மாட்சி
எய்த அளிக்கும் இராஜலக்ஷ்மி அம்மைபன்னாள்
மெய்தழைய வாழ்க! புவி மேல்.

அன்பன்,

திருவாமாத்தூர்
விழுப்புரம் P.O.
1-3-55

வித்துவான். தி. மு. சங்கரலிங்கம்
தமிழாசிரியர்
கௌமார மடாலயம்.

78419
Q25
N55

சாத்து கவி

நூலாசிரியர் பதியாகிய

அருண்மிகு. தண்டபாணி சுவாமிகள் இயற்றியது

மலைமீதிருந் துருண்டும் வாழ வென்னைக்காத் தாண்(டு)
இலைவேற்கைச் சண்முக வேளீந்த—கலைமானேர்
சுந்தரப்பேர்த் தோகை துணிந்துரைத்த பெண்மாட்சி
அந்தரத் தோர்ஆரமு தொப்பாம்.

ஷை தண்டபாணி சுவாமிகள் மாணாக்கரி லொருவராகிய

கோ.தா. சிரவணம்பட்டி இராமானந்த சுவாமிகள் இயற்றியது.

வெண்பா.

பாதி நிலாச் சூடும் பரசிவத்தின் பங்கிலுற்ற
ஆதி சிவையே அவனிமிசை—மா துருவாய்
வந்துபெண்கள் மாட்சி வழங்கினர் மிக்கோர்கள்
சிந்தை யறியுந் திறம்.

ஷை தண்டபாணி சுவாமிகளின் மாணாக்கர்களால் இயற்றியது

அறிவுற்ற பெண்மாட்சி யாருமதித் தேத்தச்
செறிவுற்ற வேலன் றிறத்தால்—நிறைவுற்ற
அன்னை சரச்சுவதி யாகுந்தாய் சுந்தரம்மாள்
மன்னப் பொழிந்தார் மழை.

பெண்மாட்சி யென்னும் பெருநா லுரைத்துலகோர்
வண்மாட்சி யெய்த வழங்கினரால்—எண்மாட்சிச்
சந்தநவில் சீர்முருக தாசனரு ளிற்றிளைக்கும்
சுந்தரத்தா யன்பின்மிகச் சூழ்ந்து.

விண்மாட்சி யெய்தி விளங்குவதும் வீறுபெற
மண்மாட்சி யெய்தி மகிழ்வதுவும்—பெண்மாட்சி
யாலே எனவுரைத்தார் அம்மைசுந் தரம்மாள்ஆன்
பாலே யனைய தமிழ்ப் பா.

கிருபானந்தவாரி

உ

தேவிசகாயம்

பெண் மாட்சி

நூல்

காப்பு

விநாயகர்

சித்திபுத்தி வல்லவையைச் சேர்ந்துமகிழ் சிந்துரமே
நத்தி யுனைத்தினமும் நான்பணிவேன்—சத்தியமாய்ப்
பெண்மாட்சி யென்றொருநூல் பேசும் படியருள்வாய்
கண்மாட்சி தன்னாற் கனிந்து.

சரசுவதி

வெண்டா மரைமலரில் வீற்றிருக்கு மெல்லியலே!
கொண்டாடி யுன்றனைக்கை கூப்பியே—வண்டாருங்
கூந்தலுடைப் பெண்மாட்சி கூறுந் துணிவுற்றேன்
ஆய்ந்தருட்சீர் சால அருள்.

குரு

சந்தன மால்வரை மீதிருந் தோனெனத் தாரணியில்
வந்தடியேனைத் தடுத்தாண்டுகொண்ட நின்வண்கருணை
சிந்தனைசெய்துனைப்போற்றுகின்றேனருட்டேசிகனே
யெந்தமரின்புறப்பெண் மாட்சிநூலொன்றியம்புதற்கே.

அவையடக்கம்

மெய்யறியாத புலவோர்சிவஞ்சத்தி வேறெனக்கொண்(டு)
ஐயுறவுற்றிகழ்ந்தாராற் பெண்மாட்சி அறையலுற்றேன்
மையுறு கண்டனை மாயனைப் போலுயர் மாதவத்தோர்
நெய்யுறுதீயிற் சினவார் முக்காலும் நிசச்சொல்லிதே.

நூல்-கலிவெண்பா

திருவருளாம் சத்திகொண்டே தெய்வமெனுமொன்றும்
சருவசித்துஞ் செய்தல்சரதம்-பொருவில் 1
அருவாமதன்றன்மையத்தகைய தானல்
உருவாயும் சத்திவிட்டார் உண்டோ-நிருமலப்பேர் 2
தாங்கும் பரமன் தலையிற் சுமந்துடலும்
காங்குறழப்பர்திகறுத்தானே-ஓங்குமெழில் 3
மோகினிபின்சென்றதன்றி மூவாமுனிவர்புணர்
பாகியற்சொல்லாராற் பரிசழிந்தான்-வாகீசர் 4
விண்டமொழிகொண்டவிறல் அரக்கன்றன்மனையைக்
கண்டுநற்கற்பின் கருத்தளித்தான்-மண்டலத்தில் 5
வல்லாளமன்னன் மருவு மனையாளாம்
நல்லாளைச்சேர்வான்போல்நண்ணினன்-உல்லாசத்(து) 6

---

2. சத்தியும் சிவமும் பொன்னும் மணியும் போல் தாதான்மியம். (வேறுபாடற்றது)

4. தாருகவனத்தில் திருமால் மோகினி உருவம் எடுக்க அவர் பின்னே இறைவன் சென்றனர். "பாகியற்சொல்லாரால் பரிசழிந்தான்" தாருகவனத்து முனிவர் மனைவியரின் உறுதியைக்காட்டும் பொருட்டுச் செய்த தன்மை.

5. இராவணன் மனைவி வண்டோதரி சிவமூர்த்தியை வழிபட்டுத் திருவருள் பெற்றனள்.

"ஆர்கலி சூழிலங்கை யழகமர் வண்டோதரிக்குப்
பேரருளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானை"
—திருவாசகம்.

6. திருவண்ணமலையை அரசாண்ட வல்லாளனுடைய பக்திக்காக அவன்மனைவியை யாசித்து அவர் மடியில் குழந்தையுருக்கொண்டு அருள்புரிந்தார்.

இன்னுமவன் செய்தஇன்பவிளையாடலெல்லாம்
பன்னுதற்கென் றன்னுணர்ச்சி பற்றுமோ–மன்னுபுகழ் 7
தாங்குநெடியோன் தரைமகளைக்காப்பதெண்ணி
ஈங்கனந்தம்சென்மம் எடுத்தானே-தேங்கமழும் 8
பூமகளைத்தன்மார்பிற்போதமுறவைத்தவள்செய்
தீமைகண்டும்சற்றும்சினந்தில்லான்-ஆமகிழக் 9
குன்றெடுத்தோன் றன்னுருவாக்கோபியர் தங்கூட்டத்தில்
அன்றுசெய்தலீலைக்களவுண்டோ-பொன்றியதோர் 10
பொல்லாச்சலந்தரன்றன்பொற்கொடிபாற்போய்க்கபட
சல்லாபம்செய்தவள் சொல்சாபமுற்றான்-பல்லார் 11
அறிய அவள்நீற்றும் அணியுடம்பின் வாசம்
செறிதுளவேமாலையென் றும்சேர்த்தான்-மறியணியும் 12
கையான்மயங்கவொருகாரிகையாய்வேடமெடுத்(து)
எய்யாமல்ஓர்மகவும்ஈன்றானே-மெய்யாக 13
மாயனென் னும்பேரொன் றும்வைத்துள்ளானன்னவன்சீர்
ஏயவுரைத்திடுதற்கியான்றரமோ–தூயதவ 14
மாமுனிவர் போற்ற வனசமலர் மீதிருந்து
சேமமுறப் பல்லுலகும் செய்பிரமன்–பாமரருங் 15
கற்றவரு மற்றுங் கணமாய சீவர்களும்
நற்றகைசால்வாக்கினைலிநண்ணிடுமா(று)-உற்றவளைத் 16
தன்மனையாய்ப் பெற்றுமெழிற் சாவித்திரி முதலாம்
பன்மடவாராசையினிற்பட்டுழன்றான்-மன்மதன்றன் 17
சேனைத்தலைமைத்திலோத்தமையைச்செய்தவள்பின்
மானத்தை விட்டோடி மாழ்கினான்-பானல் 18

---

11. பிருந்தையின் வரலாறு

13. மோகினி யுருக்கொண்ட திருமால் சிவமூர்த்தியின் கருணையால் ஐயனாரைப் பெற்றனர்.

விழியார் அனேகரையோர் வெம்பகலிற்சேர்ந்து
பழியாயிரம்விளைத்துப்பாவம்-பொழிமேகம் 19
அன்ன அசுரர் அனேகரைப்பெற்றுன் இவைபோல்
இன்னமவன்கதைகள் எத்தனையோ-முன்னவனென்(று)20
எல்லவரும் போற்றும் எழிலானைமாமுகத்தோன்
வல்லவையைத் தன்மடியில்வைத்திருந்தும்-நல்லசித்தி 21
புத்தியெனுமிருவர் போகமுந்துய்த் தான, திருமால்
அத்தினத்திற் பெற்ற பெண்கள் ஆறிருவர்-நத்திக் 22
களிகூரக் கொண்டணைந்தான் காசினியில் ஔவை
அளிகூர முத்தியுமீந்தாண்டான்-தெளிவில்லா 23
மூடரிடத்தும் முதற்பூசை கொள்ளுமவன்
ஆடல் முழுதும் அறிவேனே-கோடனைத்தும் 24
தன்னதெனவே தனிநடனஞ்செய் முருகோன்
மின்னனைய தெய்வானை வேட்கையால்-முன்னம் 25
அசுரருடன் போராடி ஆறுநாட் பூசை
விசுவமதிற் கொள்ளாமல் விட்டான்-கொசுகனைய 26
வேடர்களுக்(கு) அஞ்சியொரு வேங்கை மரமாகி நின்று
தேடருஞ் சீர் அண்ணனொரு சிந்துரமாய்க்-காடதனில் 27
வந்துபயம் காட்ட வருத்தியும்அவ் வள்ளிமின்பால்
ஐந்துவகை யின்பமடைந்தானே-செந்தமிழ்ச்சீர்த் 28
தென்பழனியாதிச் சிவதலத்திற் சேயிழையார்
இன்பவிளையாடல்செய்ததெத்தனையோ-முன்(பு)ஒருத்தி29
கையிழந்த போது கணத்திலெதிர் தோன்றி நல்கி
மெய்யிலங்கச் செய்ததுவும் வீண் சொல்லோ-மையனைய30

---

30. முருகம்மையார் என்னும் உத்தமியின் கரத்தைக் கணவன் வாள் கொண்டு துணிக்க, முருகா என்று அவள் அழைக்க முருகவேள் முன்தோன்றிக் கரமலரைத் தந்தனர்.

மாயனெனும் சத்தி மயிலாக ஞானசத்தி
ஏயவடி வேலாகும் ஈடார்ந்த-தூயவன்சீர் 31
இத்தனை தானென்றியம் புதற்கென்னுன் முடியா
அத்தனையுந்தேர்ந்துள்ளார் ஆர்கொல்லோ-கைத்தலத்து
வச்சிரத்தாலுள்ள மலைச் சிறகெல்லாமரிந்தோன்
நச்சியிந்திராணி முதல்நாரியர்கள்-மெச்சி மகிழ் 33
போகம்அயின்றும் புவித்தலத்தோர் பெண்மயிலால்
ஆகமுற்றும் ஈனம் அடைந்தானே-ஆகமதில் 34
எத்தேவர் கட்குந்தன்எச்சிலருள் அக்கினியும்
மெய்த் தேசால்ஏழுவியுன் முனிவோர்-பத்தினிமார்ப் 35
புல்லினற்போல் மகிழ்ந்து பொய்மை வெளியாய்த்தனது
மெல்லியலாள் கண்டு நகவெட்கினன்-வல்லிருப்புத் 36
தண்டாற்கொலை செயலேதன் ருெழிலாக் கொள் சமனும்
விண்டோய் அரமகளிர் வேட்கையால்-பண்டோர் 37
அனலாசுரனை அளித்திட்டானல்
இனமாய தேவரில் மற் றியார்தாம்-கனமாய 38
சக்திசெயலைத் தணக்க வல்லாரென் றுதெளிந்(து)
உத்தியுடையார்உணராரோ-முத்தியிச்சை 39
கொண்டமுனிவோரிற் குலவுசிறுவேதனெனக்
கண்டபெரும்புகழ்சேர் காசிபன்ருன்-வண்ட 40
அசுரமக ளாசையினல் அன்று பட்ட பாடும்
விசுவமெச்சும் சேணுலகின் மீன்கள்-கொசுகனைய 41

---

34. அகலிகை வரலாறு.

36. அக்கினிதேவன் ஏழு முனிவர்களது மனைவியரைக் கண்டு விரும்ப, அவன் மனைவி சுவாகாதேவி அருந்ததியை அல்லாது ஏனைய முனிவர் மனைவியர் உருவம் தாங்கிக் கணவனை மகிழ்வித்தாள்.

ஆகப்பெயர்த்தெறிந்த ஆண்மையுறுகோசிகன்றான்
தாகமுற்றுமேனகைமின் தன்னுறவால்-கோகனகத் 42
தையலனைய சகுந்தலையைப் பெற்றதுவும்
ஐயம் அறவே நன்காராயில்—வையகத்தில் 43
மற்றைத்தவத்தோர்வயிராக்கியங்களெடுத்(து)
எற்றைக்கும்பேசற்கிலக்காமோ-கற்றைநெடும் 44
கூந்தற்கவுரிமருள்கொண்டதொண்டரன்றோமுன்
வேந்தர்மெச்சுஞ்சித்தியெய்திவீடுற்றார்-மாந்தர்களில் 45
சிற்சிலர்ஏதேதோ தெளிந்தாற்போற்சேயிழையார்
நற்செயலிற்சற்றும் நவிலாமல்-விற்சுரிகை 46
கொண்டுவெட்டல்போன்றவர் தங்கோலாகலங்களெல்லாம்
மண்டு நிந்தையாயே வகுக்கின்றார்-திண்டுமிண்டு 47
பேசுமவர் நாமுழுதும் பெண்ணங்கிச மெனஏன்
கூசுகிலரோவுணருங் கூர்ப்பிலரோ-ஈசனுடல் 48
பாதிபெண்ணென்றோர்ந்தாற்பழிப்பதற்கு ஞாயமுண்டோ
ஏதமிக்க ஆணென்றும் இல்லையோ-ஏதங்கள் 49
ஆயிரமுங்கற்ற அரக்கனன்று சீதைமுன்பிற்
போயிரந்து செய்தபல பொல்லாங்கும்-தூயோர் 50
இகழுமர வக்கொடியோ னெண்ணுமற் றங்கள்
அகம் விளங்கவந்த அருளான்ற-மகளுடுத்த 51
சேலை கொண்டவாறும் அன்ன தீமைபலவுந்தொகுத்து
மாலையென்றோர்பெண்பாடிவைத்ததுண்டோ-ஞாலமுற்றும்
மாதாவென்றென்றும் வழுத்து புகழ் ஔவையைப்போல்
மீதாம் புலமை பெற்றோர் வேறுண்டோ-ஏதாலோ 53
அன்னவளும் பெண்கட்(கு) அடக்கம்பகர்ந்ததன்றித்
துன்னும்அகங்கார முற்றச்சொல்ல வில்லை-மன்னும் 54
அறிவின்சிறப்படைந்த ஆண்ஞானிகளிற்
பொறியடக்கமுற்ற சுகர்போன்றோர்-வெறிகமழும் 55

வேயாமென்றேள்படைத்தமெல்லியரெல்லோர்களையும்
தாயாய்நினைத்தே தவமுடித்தார்-வாயார 56
நிந்தித்து வாழவில்லை நீடுகருப்புச்சிலையாற்
பந்திக்கப்பட்டசிலபாவலரே-அந்திபகல் 57
மின்னார் பொல்லாரெனவே வீணாய்ப்பழித்துரைத்தார்
அன்னார்போல்மாதரும்உண்டம்புவியில்-மின்னார்
இருவர்களு மாண்பெண்ணனும் பிறப்பிற்கீடின்(று) 58
ஒருசமமென்றோதுவதே உண்மை-பெருமைசிறி(து) 59
ஓதுகென்றுற் சொல்கின்றேனுண்டாக்கிக்காத்தழித்து
மீதுறையும்மூவரையோர்மெல்லியலாள்-வாதுவிண்டு 60
வந்த படிபோய் மகிழவிடா மற்சிசுவாய்
நொந்தழுமாறோர்சொல்நுவன்றிட்டாள்-சந்ததமும் 61
வந்துபோம்பானுவெளிவந்தாற்றன்மங்கலத்தின்
தந்திறுமென்றஞ்சியொருதையலாள்-அந்த 62
முனிவன் வாய்சொன்னபடி முற்றுமையெண்ணித்
தனியிரவேநீடச்சபித்தாள்-மனிதர்களும் 63
தேவர்களுமெச்சவளர் சித்தர் குழாத்திற்சிறந்த
கோவனையனுவிளக்குங்கொங்கணனைப்-பூவை 64
ஒருத்தியெளியகொக்கென்றுன்னி யென்மேற்பார்வை
உறுத்துகின்றாயோஎன்றுரைத்தாள்-நிருத்தனைத்தன் 65

60, 61. அநசூயை மும்மூர்த்திகளைக் குழந்தைகளாகச் செய்தனள்.

63. நளாயனி ஏழுநாள் பொழுது விடியாமற் செய்தாள்.

65. வாசுகி "கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா" என்றாள்.

கைக்குழந்தையாமெனவேகண்டவரெல்லாம்வியப்ப
ஒக்கலேயில்வைத்துநடந்தோர்பெண் உய்ந்தாள்-முக்கணனும் 66
மாலும்பிரமாவும் வந்து தன்பால் மாட்சிமிகச்
சாலும்உருக்கொள்ளவொருதையலாள்-பாலனைய 67
கண்டகைப்பேர்மாநதியாய்க்காசினியோர்கண்காண
விண்டலத்துக்கங்கை ஒல்கும்வீறுற்ருள்-மண்டலத்துக்(கு)
ஆதாரமானமுப்பால்அன்றுரைத்தவள்ளுவர்தம்
மாதானவாசுகிசெய்வண்மையால்-மீதான 69
வானிடத்துத்தேவர்மனநாணிச் சென்றவுண்மை
நானிலத்தோர் பேசாதநாளுண்டோ-தேனிகர்க்கும் 70
செந்தமிழ்ச்சீர்மேவுந்திருமதுரைமாநகரில்
வந்தசமணர் மறங்களைந்து-சுந்தரனார் 71
கோயிற்சிறப்பமைத்துக் கொற்றவன் கூன்றிருந்தல்
சேயிழைமின்னளொருத்தி செய்கையன்றே-தாயிற் 72
சிவன்உருவங்கொண்டு சென்று சேய்பிறப்பித்தற்காம்
தவமுயன்ருளோர் சிறியதையல்-அவனிமிசை 73
மேருவைவில் லாக்கியந்நாள் மேவார்புர மெரித்தோன்
நீருலவாச் சென்னி நிலநச்சிதைய-யாரும் 74
திடுக்கமுறத் தன்கைவில்லாற் சிறியடித்தோன்
நடுக்குலவப் பெற்ருளோர் நங்கை-மிடுக்கர்களாம் 75

---

66. கௌரி சிவபெருமானைக் குழந்தையாக அடைந்து மகிழ்ந்தாள். (பால குமார விருத்தரான திருவிளையாடல்)

72. மங்கையர்க்கரசி.

73. திருச்சிராப்பள்ளியில் ரத்னவதி என்பாள் வழிபாட்டுக்குஉவந்த சிவபெருமான் தாயாகிச் சென்று மருத்துவஞ் செய்தனர்.

75. குந்திதேவி.

6A
7-130

ஐவர்களைச் சேர்ந்தும் அரியகற்பிற் சோராது
தெய்வமென நின்றாளோர் சேயிழையாள்-மைவனப்புக் 76
கண்டத்தான் அம்மையெனக்கான்முளையொத்தேயழைப்ப
மண்டலத்தோர்பாவைவரம்பெற்றாள்-தண்டமிழ்ச்சீர்ப் 77
பாவலரும் மாதவரும் பாருலகை ஆண்டோரும்
பூவருமின்னாரனைய பூவையருக்(கு)-ஆவல்கொண்டு 78
துய்த்தநல மும் துயரும் துணிந்துரைக்கப்
பைத்தலைச்சேடன் திறமும்பற்றுமோ-எத்தலத்தும் 79
ஆணன்றிப்பெண்மகிழா அந்தவண்ணம்பெண்ணன்றி
மாணொன்றி ஆணும்மகிழாதே-எண்விஞ்சு 80
கற்பா லுயிர்விடுத்த காரிகையார் பற்பலராம்
அற்பால்அவ்வாறிறந்த ஆணில்லை-பொற்பார்ந்த 81
முன்னைமறைபோற்று முறை வகுத்தவாறெண்ணில்
அன்னையை முன் சொன்ன துண்டம்மா. 82

78419

—*—

விண்மாட்சி யெய்தவரு மேலோர் வெறுத்துரையாப்
பெண்மாட்சி நூலிவணம் பேசினேன்—கண்மாட்சி
அன்ன அறி வுக்கறிவே யாகும் அகண்டபரம்
என்னகத்திற் றாண்டியதாலே.

---

76. திரௌபதி.

77. காரைக்காலம்மையார்.